பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 02 | சனிக்கிழமை | 16.03.2024 | அதிர்வு 228

# இந்திய மீனவர்கள் 15 பேருக்கும் மறியல்

## கடற்படையின் தாக்குதலில் படுகாயமடைந்தார் ஒருவர்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்திய 06▶

# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களின் உறவினர்களால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முற்றுகை



(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வைத்து கைதான ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரில் 5 பேர் தொடர்ந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தை நேற்று மாலை முற்றுகையிட்டனர்.

இதன்போது, தமக்கான 06▶

# நீதி கோரி வவுனியாவில் இன்று பெரும் போராட்டம்

## ஆதரவாக யாழில் இருந்து வாகனப் பேரணி

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி வழிபாடுகளின்போது பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்களைக் கண்டித்தும், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 8 பேரையும் விடுவிக்கக் கோரியும் இன்று வவுனியாவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. 06▶

# வன்முறைக் கும்பலைச் சேர்ந்த ஐவர் வாளுடன் மடக்கிப் பிடிப்பு

## யாழில் எஸ்.ரி.எப். அதிரடி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஓட்டோவில் பயணித்த வாள் வெட்டுக் கும்பலைச் சேர்ந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.நகருக்குஅண்மையாக நேற்று அதிகாலை 2 மணியளவில் 06▶




இலங்கை அரசியல்வாதிகள் குறித்து ராமன்ய பீடத்தின் கட்டபே ரஜோவனோதபதி கப்பிட்டியகொட சிறிவிமல தேரர் முக்கிய விடயம் ஒன்றைக் கூறியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் தற்போது உறுப்பினர்களாக உள்ள சில வயோதிப அரசியல்வாதிகள் விரைவில் பதவி விலக வேண்டும், அதற்கான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க 06▶

# 2002 கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஏப்ரல் இறுதிக்குள் நியமிக்கப்படுவார்கள்

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தகவல்



"வெற்றிடமாகவுள்ள 2002 கிராமிய சேவைப் பிரிவுகளுக்கான கிராம சேவை உத்தியோகத்தர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் மாத இறுதிக்குள் அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்."

– இவ்வாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவந்து தற்போது பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு எமது அமைச்சும் நிறைய பங்களித்துள்ளது.

மாவட்ட அளவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்குக் குழுக்களை உருவாக்க நாங்கள் உழைத்தோம். வறுமையில் வாடும் 20 லட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும வழங்கத் தேவையான பங்களிப்புச் செய்யப்பட்டது. தற்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், வெற்றிடமாகவுள்ள 2002 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம சேவை உத்தியோகத்தர்களைப் பணியமர்த்த கடந்த 13 ஆம் திகதி முதல் இன்று (நேற்று) 15ஆம் திகதி வரை நடைபெற்றது. இதன்மூலம் அவசியமான கிராம சேவை உத்தியோகத்தர்களை வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன், கிராம சேவை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தியோகத்தர்களின் தொழில்சார் சங்கங்களுடன் கலந்துரையாடினார். அங்கு பயணச் செலவுகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவர்களின் முன்மொழிவை முன்வைத்தனர். அது குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்கனவே நாம் சமர்ப்பித்துள்ளோம்.

அத்துடன் கிராம சேவை உத்தியோகத்தர்களின் பிரதான பிரச்சினையான கிராம அதிகாரிகள் யாப்பு உருவாக்கப்பட்டு அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இருப்பினும், இந்தப் பிரச்சினையில் விரைவில் சாதகமான முடிவை எதிர்பார்க்கலாம். மேலும், பொருளாதார மற்றும் பிற நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து, மக்களின் வாழ்க்கையை மீட்டெடுத்து, சமூகத்தில் உள்ள பிளவை மீண்டும் ஒன்றிணைப்பது நமது கடமையாகவும் பொறுப்பாகவும் இருந்தது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்பினார். எனவே இன்னும் இரண்டு வருடங்கள் இந்த அமைப்பில் நீடிக்க முடிந்தால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் திட்டங்களை நிலைநிறுத்துவதன் மூலமும் சிறந்த நாட்டை உருவாக்க முடியும்." – என்றார்.

# வட்டு. இளைஞன் கடத்திக் கொலை: கைதானவர்கள் விளக்கமறியலில்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பகுதியில் இளைஞனைக் கடத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் நால்வரை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தனது மனைவியுடன் காரைநகருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பியவர்களைப் பொன்னாலையில் உள்ள கடற்படையின் முகாம் முன்பாக வைத்து வன்முறைக் கும்பல் கடத்திச் சென்றது.

கணவனை ஒரு காரிலும், மனைவியை இன்னொரு காரிலும் கடத்திய வன்முறைக் கும்பல், மனைவியை சித்தங்கேணி பகுதியில் இறக்கி விட்டுச் சென்றது.

கணவனைக் கடத்திச் சென்றவர்கள் அவரைக் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கி வாளால் வெட்டிப் படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை வைத்தியசாலைக்கு முன்பாக வீசிச் சென்றனர்.

படுகாயங்களுடன் காணப்பட்டவரை வைத்தியசாலைப் பணியாளர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வட்டுக்கோட்டையில் ஒரு இளைஞனைக் கைது செய்தனர். அதேவேளை, கிளிநொச்சியில் பதுங்கியிருந்த அராலி பகுதியை சேர்ந்த நான்கு பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களைக் கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய பொலிஸார், கிளிநொச்சியில் கைதான நால்வரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும், அவர்களை 48 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க வேண்டும் என்றும் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.



பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்ற, மன்று நால்வரையும் 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தது. மற்றைய சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. அத்தோடு அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கும் கட்டளையிட்டது.

அந்நிலையில் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட நால்வரையும் நேற்று வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்தியவேளை அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது.






# அரச பணத்தை உரிய முறையில் செலவு செய்து மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைகளை வழங்குக

## ஜனாதிபதி ரணில் சகல பிரதேச செயலாளர்களிடமும் கோரிக்கை

அபிவிருத்திக்காக அரசாங்கம் வழங்கும் நிதியை உரிய முறையில் செலவழித்து, அதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி, மக்களுக்கு நன்மைகளை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துப் பிரதேச செயலாளர்களிடமும் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக அனைத்து மாவட்ட செயலாளர்களுடனும், பிரதேச செயலாளர்களுடனும் நேற்று கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"வலுவான எதிர்காலத்திற்கான முன்னுரை – 2024" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில், அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த பின்னர், இந்த ஆண்டு 2024 இல் மீண்டும் பொருளாதார வளர்ச்சியை எட்ட எதிர்பார்க்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டது. அதன் பின்னர் கொவிட் தொற்றினால், 2022 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகமாகக் குறைந்தது. எனினும், பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதாரத்தை சீர்செய்ய முடிந்தது. 2024ஆம் ஆண்டில் 2 வீதம் பொருளாதார வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டு 2 வீதம் வளர்ச்சியை எட்டினாலும், 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை அடைவதற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகும். இருப்பினும், 2027 அல்லது அதற்கு முன்னதாக அந்த இலக்கை அடைய வேண்டும் என்று நான் இலக்கு வைத்துள்ளேன்.

2022 ஆம் ஆண்டு நான் நாட்டைப் பொறுப்பேற்ற போது நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதன்போது சிறுபோகத்தை வெற்றிகரமாக செய்வதற்கு முன்னுரிமை கொடுத்தேன். அதன் பின்னர் பெரும்போகத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. அப்போது எங்களிடம் பணம் இருக்கவில்லை. உலக உணவு அமைப்பின் மூலம் 36,000 மெட்ரிக் தொன் உரத்தை அமெரிக்கா எங்களுக்கு வழங்கியது. இந்தியாவில் இருந்து 40,000 மெட்ரிக் தொன் யூரியா வழங்கப்பட்டது. உலக வங்கியிடமிருந்து 135,000 மெட்ரிக் தொன் உரம் கிடைத்தது. இதனாலேயே சிறுபோகத்திலும், பெரும்போகத்திலும் சிறந்த முறையில் விவசாயம் செய்ய முடிந்தது.

தற்போது நிலைமை சீராகி வருகிறது. அடுத்த 10-15 ஆண்டுகளில் நாட்டில் குறைந்த வருமானம் பெறுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே எங்கள் நோக்கம். எவ்வாறாயினும், தற்போது நிவாரணம் தேவைப்படும் மக்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதன்படி, நாங்கள் வழங்கும் பணத்தின் அளவை அதிகரித்துள்ளோம். பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைகளை இந்த வருடம் சரி செய்து கொண்டு நாம் முன்னேற வேண்டும்.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நாங்கள் வழங்கும் பணம் அனைத்தும், நாட்டின் பொருளாதாரத்தில் மீண்டும் சேர்க்கப்படுகிறது. ஏனெனில் அவர்கள் அந்த பணத்தை அன்றாட தேவைகளுக்காக செலவிடுகிறார்கள். அதன்படி இந்த ஆண்டு இந்த பணம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்படும். மேலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம். இதனால் தனியார் துறையிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது. பெருந்தோட்டத் துறையினருக்கும் சம்பள அதிகரிப்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பள அதிகரிப்பின் பலனை பொருளாதாரம் பெறுகிறது.

கடந்த காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இதனால், ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகத்தர்கள் நட்டத்தை எதிர்கொண்டனர். எனினும், அவர்களுக்கும் தற்போது நிலுவைப் பணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பணம் மீண்டும் பொருளாதாரத்தில் சேரும்.

மேலும், மக்களுக்கு இலவச நில உரிமை வழங்கும் "உருமய" திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். இதன் மூலம் மக்களின் நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். அதன்படி முதற்கட்டமாக 10 லட்சம் பேருக்கு காணி உரிமை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பிரச்சினைகள் உள்ள இடங்களில், பிரச்சினைகளைத் தீர்த்து, பணிகளைச் செயல்படுத்த வேண்டும். மேலும், மக்கள் வசிக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் உரிமையை அவர்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பொருளாதாரத்தையே நாம் தொடர முடியாது. நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகின்றது. நிலுவையில் உள்ள கடன்களுக்கு கால அவகாசம் கோரியுள்ளோம். இங்கு நமது ஏற்றுமதியை விட இறக்குமதிகள் அதிகமாக இருக்கின்றன. இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையே உள்ள இடைவெளியை ஈடுசெய்ய ஒவ்வொரு ஆண்டும் கடன் வாங்க வேண்டும். இதனைத் தவிர்க்க வேண்டுமாயின் திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

கடந்த பொருளாதார நெருக்கடியின் போது நாம் அனைவரும் பாதிக்கப்பட்டோம். அந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டால் நாம் எடுத்துள்ள இந்த முயற்சிகளினால் எந்தப் பயனும் கிடைக்காமல் போய்விடும். எனவே நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்." – என்றார்.













# ஓவியக் கண்காட்சிகளை பார்வையிட்டார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு 07, லயனல் வென்ட் கலையரங்கில் இரண்டு மூத்த ஓவியர்களான இரோமி விஜேவர்தன மற்றும் வின்ஸ்டன் சுலுதாகொட ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சிகளைப் பார்வையிட்டார்.

இரோமி விஜேவர்தனவின் கலை வாழ்க்கையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு **'Celebration of women'** எனும் தொனிப்பொருளில் ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஓவியக் கண்காட்சிகளை நடாத்தும் வின்ஸ்டன் சுலுதா கொட தனது 34 ஆவது ஓவியக் கண்காட்சியை 'பாவனவக சாந்திய"(தியானத்தின் அமைதி) என்ற தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தார்.

46 வருடங்களாக ஓவியத் துறையில் ஈடுபட்டு வரும் வின்ஸ்டன், வெளிநாடுகளிலும் தனது ஓவியங்களைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

அன்றாட வாழ்க்கை உறவுகள், உலகளாவிய நெருக்கடிகள், மத வாழ்க்கை முறைகள் உள்ளிட்ட பல வண்ணமயமான ஓவியங்கள் இந்த ஓவியக் கண்காட்சிகளில் இடம்பெற்றிருந்தன. ஓவியக் கண்காட்சிகளைப் பார்வையிட வந்த மக்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, சில குழு புகைப்படங்களிலும் இணைந்து கொண்டார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, கலாநிதி தயான் ஜயதிலக்க, சுஜன் விஜேவர்தன, லுசில் விஜேவர்தன, நடாலி விஜேவர்தன, மாலன் ஜயவர்தன, ரோஷினி குணரத்ன, சிரானி தேனபது, நிஹால் தேனபது மற்றும் மூத்த கலைஞர் எஸ். எச்.சரத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.















# இந்திய - இலங்கை வர்த்தக உறவுகள் விரைவில் பலப்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விரிவான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கும் வகையில் மிக விரைவில் பலப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் மற்றும் 75 ஆவது இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கை இந்தியச் சங்கம் (Sri Lanka India Society) நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவிற்கு இதன்போது விசேட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. இந்திய – இலங்கை உறவுகளின் அண்மைக்கால சிறப்பம்சங்கள் அடங்கிய “மைத்திரி” சஞ்சிகையும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மத மற்றும் கலாச்சார ரீதியான பாரிய பிணைப்பு உள்ளது. மேலும் நமது இரு நாடுகளுக்கும் பொதுவான பாரம்பரியமும் உள்ளது.

நானும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் கூட்டாக கைச்சாத்திட்ட தொலைநோக்குபிரகடனம்செயற்படுத்தப்படும் நிலையில் 75ஆவது ஆண்டு நிறைவு கொண்டாடப்படுவது விசேட அம்சமாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவை பலப்படுத்தும் தொலைநோக்கு அறிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுக்க உறுதிபூண்டுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார மற்றும் மத உறவுகள், இரு நாடுகளும் ஜனநாயக நாடுகளாக இருப்பது, இரு நாடுகளுக்கும் பிரிட்டிஷ் சட்டக் கட்டமைப்பு இருப்பது போன்ற விடயங்கள் குறித்து நாங்கள் தொடர்ந்து பேசிவருகிறோம். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவை நாம் மறந்துவிட்டோம்.


இலங்கை ரூபா மற்றும் இந்திய ரூபாவின் பாவனை தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே, கடந்த காலங்களில் மக்கள் வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்குப் பொதுவான நாணயத்தைப் பயன்படுத்தியமையை இது காட்டுகிறது. அதற்கேற்ப, இருநாட்டு உறவுகளை வலுப்படுத்த நாம் இப்போது உழைக்க வேண்டும். போக்குவரத்து மற்றும் எரிசக்தி ஆகிய அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்தப்பட வேண்டும்.

மேலும், தென்னிந்தியாவிற்கு வசதியாக இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன்படி, தென்கிழக்காசியா மற்றும் வங்காள விரிகுடாவின் பிராந்தியங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் திருகோணமலையின் மீள் அபிவிருத்தி தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வங்காள விரிகுடா பிராந்தியத்தின் மூலோபாய மதிப்பு காரணமாக, கொழும்பு துறைமுகத்தின் பயன்பாடு தற்போது மேம்பட்டு வருகிறது. இதன் ஊடாக இலங்கைக்கு எவ்வாறு பயன்களைப் பெறுவது மற்றும் இலங்கையிடம் உள்ள மேலதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இந்தியாவுக்கு எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பில் செயற்பட்டு வருகிறோம்.

சுற்றுலாத்துறையில் கவனம் செலுத்துகையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவுக்கு அடிக்கடி வரும் இலங்கையர்களும் உள்ளனர். இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதைப் போன்றே இலங்கையில் இருந்து திருப்பதி, அயோத்தி, குருவாயூர் போன்ற இடங்களுக்கு இலங்கை சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக செல்கின்றனர்.

எனவே, எமது இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கடந்த வருடத்தில் முன்னெடுத்த வேலைத் திட்டத்திற்காக இலங்கை – இந்தியச் சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றேன். மேலும் நாம் வெளியிட்டிருக்கும் இந்த “தொலைநோக்கு” அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.” – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவரைத் தரிசிக்கச் சென்ற சமயமே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படா விட்டால், விரைவில் நாடாளுமன்றம் முதியோர் இல்லமாக மாறி விடுமென ராமன்ய பீடத்தின் தேரர் நையாண்டியாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள அரச ஊழியர்கள், பொதுத்துறைப் பணியாளர்கள் 60 வயதில் ஓய்வு பெற வேண்டுமென சட்டம் உள்ளதாக ராமன்ய பீடத்தின் கப்பிட்டியகொட சிறிவிமல தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயினும், 60 வயதுக்கும் மேற்பட்ட பலர் தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தற்போதைய நாடாளுமன்றில் உள்ள வயோதிபர்கள் பதவி விலக வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்துக்கமைய நாடாளுமன்றில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் பதவி விலகாவிட்டால், அவர்களுக்கு எதிராகப் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்காகப் பணியாற்றுவதில்லை எனவும், நாட்டின் வளங்களை வெளிநாட்டவருக்கு விற்பனை செய்வதை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றனர் என்றும் கப்பிட்டியகொட சிறிவிமல தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் உள்ள சாதாரண பிரஜை ஒருவர் 50 ரூபா திருடினால் அவருக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், நாடாளுமன்றத்துக்குள் இருந்தவாறு பில்லியன் கணக்கில் திருடுபவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உண்மைகளைத் துணிந்து வெளிப்படையாகக் கூறும் பௌத்த தேரர்களும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தமிழர் தரப்பில் அரசியல் தலைவர்களின் வயோதிபப் பட்டாளத்தை அவர் அறிந்திருந்தால் இன்னும் அதிகம் கூறியிருப்பார்.

பதவியில் இருக்கும் வயோதிபர்களை மட்டுமல்ல, பதவியாசையுடன் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு காத்துக்கிடக்கும் தமிழ்த் தலைவர்கள் பற்றியும் அவர் பேச வேண்டி நேர்ந்திருக்கும்.

காலில் செருப்பை இன்னொருவர் மாட்டிவிட வேண்டிய வயோதிபத்தில் இருக்கும் ஒரு தலைவர், இவ்வருடம் வரக்கூடிய பொதுத் தேர்தலிலும் திரும்பவும் குதிக்கும் கனவில் இருக்கின்றார் என்று தெரிகின்றது. அது உண்மையானால் இன்னொரு தடவையும் பாடம் படிக்கத் தயாராகின்றார் என்றுதான் அர்த்தம்.

## வெடுக்குநாறிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நீதியை வலியுறுத்தி ஆலயப் பூசகர் உள்ளிட்ட 5 பேர் நான்காவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இதன் காரணமாக அவர்களது உடல்நிலை குறித்து இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் மனித உரிமைகள் ஆணைக்குழு எடுக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# பவித்திரன் படுகொலை தொடர்பில் 4 கடற்படையினரிடம் வாக்குமூலம்!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ். வட்டுக்கோட்டை – மாவடிப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் குடும்பஸ்தரான தவச்செல்வம் பவித்திரனின் படுகொலைக்கு ஒருவகையில் காரணமாக இருந்த கடற்படையினரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு மல்லாகம் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அதற்கமைய அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

மேற்படி இளம் குடும்பஸ்தர் கடந்த 11ஆம் திகதி அவரது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அண்மையில் நின்ற வன்முறைக் குழுவினர் அவரைத் துரத்தினர். இதன்போது மேற்படி குடும்பஸ்தரும் அவரது மனைவியும் கடற்படை முகாமுக்குள் புகுந்தனர்.

இவ்வாறு அடைக்கலம் புகுந்தவர்களைத் துப்பாக்கிகளுடன் நின்ற கடற்படையினர் வெளியே விரட்டி கொலைக்கு உடந்தையாகச் செயற்பட்டுள்ளனர். கடற்படையினர், அவர்களை விரட்டும் சி.சி.ரி.வி. காட்சிகள் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், குறித்த சம்பவம் இடம்பெறும்போது அவ்விடத்தில் இருந்த கடற்படையினரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை முன்வைத்தனர். இதையடுத்துக் கடற்படையினர் நால்வரிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அதனடிப்படையில் குறித்த கடற்படையினர் நால்வரிடமும், யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பாதிக்கப்பட்டவர்களுடன்கலந்துரையாடியதுடன்,அவர்களிடம் இருந்து முறைப்பாடுகளையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் இன்றும் நாளையும் வவுனியா சிறைச்சாலைக்குச் சென்று உண்ணாவிரதக் கைதிகளைப் பார்வையிடுவதாகவும், இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட உறவினர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதி கோரி வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் பங்கேற்குமாறு தமிழ் அரசியல்வாதிகளும், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் இன்று காலை 07.30 மணிக்கு யாழ். நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வவுனியாவுக்கு வாகனப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வன்முறைக் கும்பலைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஓட்டோவில் பயணித்த 5 பேர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். மத்யூஸ் வீதியைச் சேர்ந்த 25 வயதான ஓட்டோ சாரதி, கொக்குவிலைச் சேர்ந்த 25 வயதான இளைஞன், யாழ். நகரத்தைச் சேர்ந்த 20 வயதான இளைஞன், குருநகரைச் சேர்ந்த 26 வயதான இளைஞன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 19 வயதான இளைஞன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணித்த ஓட்டோவில் இருந்து வாள், இரும்புக் கம்பி, இரும்புக் குழாய் என்பன மீட்கப்பட்டன.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மீனவர்கள் 15 பேரும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இந்தியா – நாகபட்டினத்தைச்சேர்ந்தமீனவர்கள்15பேர்யாழ்ப்பாணம் – காரைநகர் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் .

மேற்படி மீனவர்கள் எல்லை தாண்டி வந்து சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் நீரியல்வள திணைக்களம், அந்த மீனவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

இந்நிலையில், மீனவர்கள் அனைவரையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கைதான மீனவர்களில் ஒருவர் கடற்படையினரின் தாக்குதலில் படுகாயமடைந்துள்ளார். அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



# விமானப்படை தலைமையகக் கட்டடம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது



இலங்கை விமானப்படையின் தலைமையகமாக பயன்படுத்தப்பட்ட கட்டடம் உத்தியோகபூர்வமாக பொலிஸாரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

பாதுகாப்புஅமைச்சின்செயலாளர்ஜெனரல்கமல்குணரத்ன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

சுமார் இரண்டு தசாப்தங்களாக இலங்கை விமானப்படையின் தலைமையகமாக பயன்படுத்தப்பட்டு வந்த 12 மாடிகளைக் கொண்ட கட்டடம் 3 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் பொலிஸ் தலைமையகமாக செயற்படவுள்ளது.

உத்தியோகபூர்வமாக கையளித்தல், ஏற்றுக்கொள்ளல் தொடர்பான ஆவணங்களில் விமானப்படை பணிப்பாளர் ஜெனரல் எயார் மார்ஷல் மனோஜ் கப்பெட்டிபொல , பொலிஸ் தலைமையக நிர்வாகப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கலாம் திலகரத்ன உள்ளிட்டோர் கையொப்பமிட்டனர்.

பின்னர் விமானப்படைத் தளபதி , பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு இடையில் உரிய ஆவணங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், விமானப்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பேரினவாத வெடுக்கு நாறுகின்றது!

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றிருப்பது வழமையாக நடக்கும் பொலிஸ் அராஜகமோ, அத்துமீறலோ, அடாவடித்தனமோ, வன்முறையோ அல்ல. அதையும் தாண்டிய இனவாதக் கொடூரம்.

பௌத்த - சிங்களப் பெரும் தேசியவாதத்தினால் கட்டமைக்கப்பட்ட இன ஆக்கிரமிப்பின் ஒரு வெளிப்பாடு அங்கு இடம் பெற்றுள்ளது.

இலங்கைத் தீவில் மற்றைய சிறுபான்மையினரின்வரலாற்று உரிமைகளை - தொன்மைகளை - சிதைத்தழிக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாத அராஜகப் போக்கின் மற்றொரு வடிவம்தான் வெடுக்குநாறிமலையில் அரங்கேறி இருக்கின்றது.

இலங்கை ஆட்சி பீடத்தின் பௌத்த - சிங்களப் பேரினவாத குணாம்சத்தில் - மனவமைப்பில் - கிளர்ந்து வெளிப்பட்ட வெறியாட்டமே இது.

சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் சமூகங்களின் தாயகமான வடக்கையும் கிழக்கையும் கபளீகரம் செய்து, அங்கு இந்தச் சிறுபான்மை இனங்களின் தனித்துவக் கட்டமைப்புகளைச் சீரழித்து, நாசமாக்கி, அவற்றைப் பேரினவாதம் பூதமாக விழுங்கிக் கொள்ளும் சிங்களத்தின் ஆக்கிரமிப்பு வடிவமே தனது கோர - கொடூர - முகத்தை வெடுக்குநாறிமலையில் இவ்வாறு காட்டி இருக்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் வாழும் சிறுபான்மையினரைத் தனது பேரினவாத - பெரும்பான்மையின - சாதக நிலைமையைப் பயன்படுத்தி நலிவுறச் செய்து, அந்த மக்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்க வைத்து, அப்பிரதேசங்களை பௌத்த - சிங்கள மயமாக்குவதன் மூலம், இந்த இலங்கைத் தீவுக்குத் தனி பாத்திய உரிமை கொண்டாடும் தமது திட்டத்தை நோக்கிப் பேரினவாதிகள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசு மட்டத்தில் திட்டமிடப்பட்டு, தமிழர் தேசம் சிங்களத்தினுள் ஆக்கிரமிக்கப்படும் பேரினவாதத்தின் மற்றொரு அடாவடியையே நாம் வெடுக்குநாறிமலையில் எதிர்கொண்டுள்ளோம்.

தமிழர் பிரதேசத்தில் உள்ள நீதிமன்றங்களும், நீதித்துறையும் எத்தனை தூரம் நீதியாக இருந்தாலும் - நியாயமாகச் செயற்பட்டாலும் - அவை, பேரினவாதச் சட்டங்களைக் கட்டமைக்கும் இலங்கை நாட்டின் நாடாளுமன்றம், அங்கு நிறைவேற்றுகின்ற இனவாதச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இயங்க வேண்டி இருக்கின்றன. அதுவே இதில் விசனத்துக்குரிய முக்கிய விடயமாகும்.

பௌத்த - சிங்களப் பேரினவாதம் தனது ஆக்கிரமிப்பு செயற்பாட்டுக்கு பயன்படுத்தும் தொல்லியல் தொடர்பான சட்டங்களும் இத்தகைய பேரினவாத வகையறாக்களைச் சேர்ந்தவைதான் என்பது தெளிவானது.

அந்தச் சட்டங்களை கூட, இயற்கை நீதித் தத்துவத்தின் பின்புலத்தில் இயன்றவரை நீதி, நேர்மையாகக் கையாள முற்பட்ட முல்லைத்தீவு நீதிவான், அந்த மாவட்டத்தில் இதேபோன்று பௌத்த - சிங்களப் பேரினவாத வெறிப்போக்காளர்கள் குருந்தூர்மலையில் முன்னெடுத்த அடாவடித்தனத்துக்கு முன்னால் நீதியை நிலைநாட்ட முடியாமல் - அல்லது நீதியை நிலைநாட்ட முயன்றமையால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலால் - நாட்டை விட்டே தப்பி ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டமை மறக்கக் கூடியது அல்ல.

அதேபோன்ற பிரச்சினை வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயத்தில் வவுனியா நீதிமன்றத்திற்கும் வராது என்று உறுதி கூறமுடியாது.

ஆயினும், தொல்பொருள்திணைக்களத்தினர் அர்த்தமற்ற - அபாண்ட - குற்றச்சாட்டுகளை முன்வைத்து, பேரினவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கேட்டுக் கேள்வியின்றித் தொடர்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதிக்காது என்று எதிர்பார்க்கலாம்.

வெடுக்குநாறிமலை விவகாரத்திலும் எதிராளிகளுக்கு எதிராக முதலில் மூன்று நாள்களும், பின்னர் ஒரு வாரமுமே வவுனியா மேல் நீதிமன்றம் விளக்கமறியல் உத்தரவை வழங்கியிருக்கின்றது. வழமையாக வழங்கும் இரண்டு வார கால விளக்கமறியல் வழங்கப்படவில்லை. ஒரு வார காலத்துக்குள் எதிராளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு விவரங்களை விளக்கமாக முன்வைக்க பொலிஸ் தரப்புக்கு நீதிமன்றம் வழிகாட்டல் வழங்கி இருப்பது கவனிக்கத்தக்கது.

வெடுக்குநாறிமலை விவகாரத்தை ஒட்டி, முழு தமிழர் தேசமுமே கிளர்ந்து, தனது எதிர்ப்பைக் காட்டமாக வெளிப்படுத்தி வருகையில், தொல்லியல் திணைக்களமும் பொலிஸாரும் தம்மிஷ்டப்படி அடாவடித்தனம் புரிய நீதிமன்றம் அனுமதிக்காது என எதிர்பார்க்கலாம்.

# இலங்கை அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது குறித்து பரிசீலிக்கவும்

## சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவு



இலங்கை அகதிகள் முகாமில் பிறந்தவர்களுக்கு குடியுரிமை கோரி விண்ணப்பித்தால், குடியுரிமை சட்டத்துக்கு உட்பட்டு, அதனை பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு சென்னை மேல் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

சென்னை மேல் நீதிமன்றத்தில், சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி ரவிகுமார் இலங்கை அகதிகள் தொடர்பில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தமிழகத்தில் உள்ள, இலங்கை அகதிகள் முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு, இந்திய குடியுரிமை வழங்க உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அத்துடன், 2022ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி மத்திய உள்துறை அமைச்சின், முறையான பயண ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குடியுரிமை பெற தகுதியற்றவர்கள் எனவும் சென்னை மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# 15 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்




தமிழகத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் உட்பட 15 மீனவர்கள், இந்திய எல்லையைத் தாண்டி மீன்பிடித்தனர் என கூறி, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கக் கோரி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், "இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து நான் ஏற்கெனவே பலமுறை கடிதம் எழுதியுள்ளேன். கடந்த வாரம் எழுதியிருந்த கடிதத்தில் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டிருந்த 22 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நான் கோரியிருந்தேன்.


இன்று (15.03.2024) மீன்பிடிப் படகுகளுடன் தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் உள்பட 15 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்று மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் சீர்குலைவதுடன், மாநிலத்தில் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த கொந்தளிப்பும், விரக்தியும் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சனைக்குத் தூதரக நடவடிக்கையின் மூலம் தீர்வு காண வேண்டியது மிக அவசியம்.

எனவே. இந்தியா – இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அதன்மூலம் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அதிகாரிகளை வலியுறுத்த வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமிதாப் பச்சனுக்கு உடல் நலக்குறைவு

## வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்



நடிகர் அமிதாப் பச்சன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அமிதாப் பச்சன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர், மும்பையில் உள்ள கோகிலாபென் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமிதாப் பச்சன் தற்போது "கல்கி 2898 ஏடி" என்ற படத்தில் நடித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ் சினிமாவின் நகைச்சுவை நடிகர் சேஷு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சேஷு மாரடைப்பு காரணமாக, ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

நடிகர் சேஷு விரைவில் குணமடைய வேண்டும் என்று அவரது நண்பர்கள் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.




# வலிமையற்ற தமிழ்த் தலைமைகளால் நலிவடைகின்றதா தமிழர் தாயகம்?


வி.எஸ்.சிவகரன்

யுத்தம் முடிவுற்றுப் பதினைந்து ஆண்டுகளாகிவிட்ட போதும், ஏன் யுத்தம் நடந்தது – அதாவது இனமுரண்பாடு தோற்றம் பெற்றமைக்கான அடிப்படை காரணம் யாது – என்பதைக் கண்டறிந்து தீர்வு வழங்க முடியாத நிலையில், எழுபது ஆண்டுகள் கடந்தும், இனத்துவ – மொழித்துவ வன்மம் நிலைநின்று தொடர்கிறது.

புலிகள் பலமாக இருந்த காலத்தில் வடக்குக் கிழக்கில் ஓரளவுக்கேனும் சிங்கள மேட்டிமைத்துவவாதம் நலிவுற்று இருந்ததுழ் ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் 'மீண்டும் கோகிலா' என்னும் நிலையில் பல்பரிமாணத்தில், பல யுக்திகளுக்கூடாக நிலப்பறிப்பு, குடிப்பரம்பல், மாற்றம், மொழிச்சிதைப்பு, பண்பாட்டழிப்பு, பொருளாதாரஅழிப்பு தொடர்கின்றன. இவற்றை தொல்பொருள் திணைக்களம், வனத்திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் ஊடாக மேற்கொண்டு, தமிழர் தாயகத்தைத் தனது ஆக்கிரமிப்புக்குள் தொடர்ந்தும் வைத்திருக்க அரசாங்கம் முயல்கிறது.

ஏலவே முப்படைகளினால் அபகரிக்கப்பட்ட நிலங்கள், வளங்கள் ஏராளம். ஆகவே சகல வழிகளையும் காலத்துக்கு காலம் அரசாங்கம் பயன்படுத்துகின்றது. சிங்களப் பெருந்தேசியவாதத்தின் இராஜதந்திரமும் புத்திபூர்வ அணுகுமுறையும் பெருவளர்ச்சி பெற்றுவிட்டது. அதன் விளைவே இவ்விதமான தந்திரோபாய அபகரிப்புச் செயற்பாடுகள். கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ்மக்களால் நடாத்தப்பட்ட ஜனநாயக போராட்டத்தை அரசு கண்டு கொள்ளவே இல்லை. ஜனநாயகம் என்பது ஒரு கும்பலின் ஆட்சி எனும் லெனின் கூற்றை ஆட்சியாளர்கள் நிரூபித்தே வருகிறார்கள்.

பௌத்த தேசியவாத இனவாதத்தால் கட்டமைக்கப்பட்ட கொழும்பு அரசியலை மடைமாற்றம் செய்வது என்பது குதிரைக் கொம்பாகவே காணப்படுகிறது.

தமிழர் தரப்பில் கட்டமைக்கப்பட்ட ரீதியில் ஜன நாயகப் போராட்ட நிர்ணயம் ஏற்படுத்தப்படவில்லை. தேர்தல் அரசியலை மையப்படுத்திய கட்சிகளின் குறு நிலைப் போராட்டமே நடைபெறுகிறது. சிவில் அமைப்புக்களால் கூட பாரிய போராட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை. இதற்குள் அரசியல்வாதிகளின் இடையீடும் புலம் பெயர் அமைப் புகளினதும் தனி நபர்களின் தலை யீடுகளும் நிலைமையைக் குலைக் கின்றன. எல்லாக் கதவுகளும் மூடப்பட் டமை போன்ற உணர்வே செயற்பாட் டாளர்கள் மத்தியில் தற்போது காணப் படுகின்றது.

காரணம் நம்பிக்கை தரக்கூடியதாக கடந்த பதினைந்து ஆண்டுகளில் பெரிய மாறுதல் எதுவும் நிகழவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் நடைபெற்ற நல்லாட்சி அரசில் கூட உருப்படியாக எதுவும் நிகழவில்லை. குறைந்தபட்சம் கல்முனை வடக்கு பிரதேச செயலக காணக்காளர் நியமனத்தில் கூட கணக்குவிட்டது அரசு. ஜெனிவா மனிதவுரிமைகள் விவகாரம் நிலைமாறுகால நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் நீர்த்துப்போனது. இதயததால், இணைந்து இருக்கின்றோம் என்றார்கள். ஆனால் அரசாங்கம் இவர்களை கருவேப்பிலையாக பயன்படுத்தியிருந்தது.

சேர் பொன் இராமநாதன் தொடக்கம் இன்றைய சம்பந்தன் – சுமந்திரன் வரை ஏமாந்ததும் ஏமாறிய மையுமே வரலாறாக இருக்கிறது.

இதில் இருந்து தமிழ்த் தலைவர்கள் எதையும் புத்திபூர்வமாக உணர்ந்து தெளிந்தவர்களாக இல்லை. ஏனெனில் தொடர்ந்து ஆள்கள் மாறினாலும், அரசியல் செல்நெறியை மாறுதலின்றித் தொடர்ந்து, தோல்வியையும் பின்னடைவினையும் சந்தித்து நலிவுறும் நிலையே காணப்படுகிறது.

யுத்தத்திற்குப் பின்னர் இராணுவமே வெளியேறு என மன்னாரில் 07 – 07 – 2012 இல்தான் முதலாவது போராட்டம் தொடங்கியது. பின்னர் எத்தனை போராட்டங்கள்... அடைந்த பயன் என்ன? தமிழீழம் கேட்டுப் பெரும்படையை வைத்துப் போராடிய இனம் வெடுக்குநாறிமலையில் சாமிகும்பிடப் போராடும் நிலைக்கு கொண்டுவந்துவிட்டுள்ளது.

இந்த நிலைக்குக் காரணம் நோக்கு நிலையற்ற – வல்லமையில்லாத – வலிமையற்ற – ஆளுமையற்ற – தமிழ் தலைமைகளின் கையாலாகாத செயற்பாடேதான். வாக்கு அரசியலைத் தவிர கடந்த பதினைந்து ஆண்டுகளில் தமது குடும்ப மற்றும் வணிக நலனை மட்டுமே அவர்கள் மேம்படுத்தி வந்தனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# வலிமையற்ற தமிழ்த் தலைமைகளால் நலிவடைகின்றதா தமிழர் தாயகம்?

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் வாழ்வியல் இருப்பிலோ, இனப் பிரச்சினைத் தீர்வு விடயங்களிலோ இதய சுத்தியுடன் எவரும் பணியாற்றியவர்களாகத் தெரியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம், அரசியல் கைதிகள் விடுவிப்பு விவகாரம், குருந்தூர்மலை வழிபாட்டுரிமைப் போராட்டம், வெடுக்குநாறிமலை, மயிலந்தமடு – மாதவனை மேய்ச்சல்நிலம், தென்ன வன்மரவடி விவகாரம், தையிட்டி திஸ்ஸவிகாரை போராட்டம், வலிவடக்குக் காணி விடுவிப்புப் போராட்டம், கடற்படைக்கெதிரான முள்ளிகுளப் போராட்டம்... இவை மட்டுமா? ஆங்காங்கே புதிய வரலாற்றைக் கற்பித்து பௌத்த கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளமை வேறு.

இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் கூட இதுவரை தீர்வுகாண முடியாதவர்களாகவே தமிழ்த் தலைவர்கள் வெறும் வெற்றுக் கோசத்துடன்தான் செயற்படுகின்றனர். அதாவது தாயகம், தேசியம், தன்னாட்சி, நிர்ணய உரிமை, இணைந்த வடக்கு – கிழக்கு என்று தேர்தல் காலத்தில் மட்டும் உரத்துப் பேசி உணர்வூட்டி வாக்குப் பெறும் தந்திரத்துடன்தான் தமிழர்களின் பிரதிநிதிகள் எனச் சொல்லப்படுபவர்கள் கடந்த பல தசாப்தங்களாக செயற்பட்டு வருகின்றனர். புலிகளை தவிர இவர்களில் எவர்களிடத்திலும் இனத்துவ, மொழித்துவ, பண்பாட்டியல் தமிழ்த்தேசிய இருப்பில் உணர்பூர்வ விசுவாசம் இருந்திருக்கக் கூடிய ஏது நிலை காணப்படவில்லை என்பதே பலரது விமர்சனமும் உண்மையும் கூட.

2009க்குப் பின்னர் தமிழ் மக்களின் இனப்பிரச் சினையைத் தீர்ப்பதற்கு செலவிடும் நேரத்தை விட ஒருவரை ஒருவர் அரசியல் அரங்கில் இருந்து அகற்றுவதற்குத்தான் அதிக நேரத்தை செலவு செய்கின்றனர். தற்போது உள்கட்சி மோதலும் பூதாற்றமகியுள்ளது. அத்துடன் 'தியாகி', 'துரோகி' பட்டங்கள் வழங்குவதிலும் ஆளுக்குஆள் விஞ்சிய வர்கள் அல்லர் என நிரூபிக்கின்றனர்.

சனநாயக அரசியலில் எவரும் உத்தமர்கள் அல்லர். எவரும் இருபத்திநான்கு கரட்டும் இல்லை. தேர்தல் அரசியல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட திருடனிடம் ஒப்படைக்கப்பட்ட சாவி. ஜனநாயக தேர்தல் முறையில் யாரும் வல்லவர்களும் அல்லர், நல்லவர்களும் அல்லர். உத்தமர்களாலும், யோக்கியவான்களாலும் தேர்தல் அரசியலில் ஒரு போதும் வெற்றி பெற முடியாது. பணத்தாலும், ஏமாற்று வார்த்தைகளாலும், பதவி சுகபோகத்தை அனுபவிப்பதற்கு வாக்குத் திருட்டில் ஈடுபட்டு வெற்றி பெறுவதே ஜனநாயகம் எனும் சாக்கடைத் தேர்தல்முறை. இதில் யாவரும் சரிசமம்.

ஆகவே, கட்சி அரசியலையும், தேர்தல் அரசிய லையும் கடந்து, யாவரையும் அரவணைத்து ஆளுகை செய்யக்கூடிய தலைமை தமிழ்மக்கள் மத்தியில் எழாதவரை இன்னும் சில ஆண்டுகளில் தமிழ்த்தேசியம் எனும் இருப்புவாதம் வெறும் பயனற்ற சொல்லாகவே மாறிவிடக்கூடிய அபாயம் உண்டு.

இதைத் தற்காக்கப் போவது யார்? கட்டமைக்கப்பட்ட இன அழிப்பில் அரசு மிக நிதானமாகவும் வேக விவேகமாக வும் வியாபித்து முன்னேறி வருகிறது. இதைத் தடுக்க ஒருங்கிணைந்த கூட்டுப் பொறிமுறை இல்லா விட்டால் தமிழ் மக்கள் காலத்தால் காலாவதியாகி விடக் கூடிய மிகப் பெரிய அபாயம் உண்டு. இதை வாடகை வாய்தாரர் களாக – ஆதாயச் சூதாடிகளாக – வலம் வரும் தேர்தல் கால வணிகர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியுமா?

# நூற்றாண்டு விழாவில் நடைபவனி




யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற் றாண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திர பாகு தலைமையில் ஆரம்பமானது. இதன்போது பருத்தித்துறை நகரத்தைச் சுற்றிய நடைபவனியும் இடம்பெற்றது. விருந்தினர்கள், பாடசாலை சமூகத் தினர் ஆகியோர் நடைபவனியில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காண லாம்.








**1. உரலார் கேள்வி :- உங்களின் கம்பர் இறைவனைப் பற்றிப் பேசுகையில், 'ஒன்றே என்னின் ஒன்றேயாம் பல என்றுரைக்கின் பலவேயாம்' என்று பாடியிருக்கிறார். ஒன்று எப்படி பலவாகும்? பலது எப்படி ஒன்றாகும்? உங்களுக்கே இது குழப்பமாக இல்லையா?**

**உலக்கையார் பதில் :-** குழம்புவதற்கு இதில் என்ன இருக்கிறது? கம்பர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். ஒன்று பலவாவதையும், பலது ஒன்றாவதையும் சாதாரணர்களாகிய எங்களின் வாழ்க்கையிலேயே காணக்கூடியதாக இருக்கையில், எல்லாம் வல்ல இறைவனிடம் அத்தன்மை இருப்பதில் என்ன அதிசயம் இருக்கப் போகிறது?

கொஞ்சம் விளங்கச் சொல்கிறேன்! உதாரணத்திற்கு உங்களேயே எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவரா பலரா? என்று கேட்டால், 'நான் ஒருவன்தான்' என்று பதிலளிப்பீர்கள். ஆனால் ஒருவராகிய உங்களுக்குள்ளேயே பலர் இருக்கிறார்கள் என்பதை உங்களால் மறுக்க முடியுமா? அது எப்படி என்று முதலில் சொல்லுகிறேன்.

உங்களின் பெற்றோருக்கு நீங்கள் மகன். உங்கள் மனைவிக்கு நீங்கள் கணவன். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் தந்தை. உங்கள்



மாமனுக்கு நீங்கள் மருமகன். உங்கள் ஆசிரியருக்கு நீங்கள் மாணவன். உங்கள் மாணவனுக்கு நீங்கள் ஆசிரியர். அலுவலகத்தில் நீங்கள் ஊழியன். இப்படி உங்களுக்குள்ளேயே பலர் இருக்கிறார்கள் என்று ஒத்துக் கொள்கிறீர்களா?

'நீங்கள் குதர்க்கம் பேசுகிறீர்கள். எல்லா உறவுக்குள்ளும் நான் ஒருவன் தானே இருக்கிறேன்' என்பீர்களாக்கும். உண்மைதான். எல்லா உறவுகளுக்குள்ளும் நீங்கள் ஒருவரே இருந்தாலும், அந்தந்த உறவிற்கேற்ப உங்கள் நிலை மாறுகிறதா இல்லையா? பிள்ளைகளோடு காட்டும் தந்தை நிலையை மனைவியோடு நீங்கள் காட்ட முடியாது. மனைவியோடு காட்டும் கணவன் நிலையை உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் காட்ட முடியாது.

ஒவ்வொரு உறவுக்கேற்பவும் உங்கள் நிலை மாறுகிறது. உங்கள் பண்பு மாறுகிறது. உங்கள் இயல்பு மாறுகிறது. இவ்வளவும் மாறும் பொழுது நான் ஒருவன்தான் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? சிலரோடு தொடர்பு வைத்திருக்கும் உங்களுக்கே இத்தனை வடிவங்களும், இத்தனை நாமங்களும், இத்தனை பண்புகளும் இருக்கும் போது, இந்த பிரபஞ்சம் முழுவதுடனும் தொடர்புபட்டிருக்கும் இறைவனுக்கு பல வடிவங்களும் பல நாமங்களும், பல பண்புகளும் இருப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

அதனால் தான் கம்பர் இறைவனை ஒன்றானவன் என்றும் பலவானவன் என்றும் உரைத்தார். இப்போது உங்கள் குழப்பம் தீர்த்ததா?

**சல்லடையார் சலிப்பு:-**
**அட இது புதுசா இருக்கே வாரிதியார்..!!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :-முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் பத்திரகை அதிபருமான சரவணபவன் அவர்கள் தமிழரசுக்கட்சிக்குள் நடந்து கொண்டிருக்கும் பதவிப்பேட்டி பற்றி, ஒரு பேட்டியில் கூறியிருந்த கருத்துக்களைக் கேட்டீர்களா?**

**உலக்கையார் பதில் :-** சின்ன வயதில் படித்த ஒரு கதையைச் சொல்கிறேன்.கேளுங்கள்!

ஓர் ஊரிலே இரண்டு பூனைகள் நண்பர்களாக இருந்தன. அவை தமக்குக் கிடைத்த உணவை எப்போதும் பகிர்ந்து உண்ணுவது வழக்கம். ஒரு நாள் ஒரு பூனையிடம் ஒரு சுவையான அப்பம் கிடைத்தது. அந்தப் பூனைக்கு, அந்த அப்பத்தை தான் மட்டும் உண்ண வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனால் மற்றப் பூனையோ அந்த அப்பத்தில் பாதி தரும்படி சண்டை போடத் தொடங்கியது. கடைசியில் இரண்டு பூனைகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன.

'நாம் இருவரும் சண்டை போட்டுப் பயன் ஒன்றும் இல்லை. ஒரு நீதிபதியிடம் செல்லலாம்' என முடிவு செய்த அவை, ஒரு குரங்கிடம் சென்று தமது பிரச்சினைக்கு தீர்ப்புக் கூறும்படி கேட்டன. அந்தக் குரங்கு பூனைகளின் ஒற்றுமை இல்லாத மனப் பான்மையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைத்தது.

ஒரு பக்கம் மற்றைய பக்கத்தைவிடச் சற்றுப் பெரிதாகத் இருக்கும்படி அந்த அப்பத்தை

**(13ஆம் பக்கம் பார்க்க)**

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாகப் பிரித்த அக்குரங்கு, ஒரு தராசின் இரண்டு தட்டுகளிலும் அவற்றைப் போட்டது. அதனால் ஒரு தட்டு தாழ்ந்து காட்டிற்று. உடனே



குரங்கு நீதிபதி கூடுதலாக இருந்த அப்பத் துண்டில் ஒரு கடி கடித்தது. கடித்த பின் அதனை ஒரு பக்கத் தராசில் மீண்டும் போட, இப்போது மற்றைய பக்கம் அதிக பாரத்தினால் தாழத் தொடங்கியது.

குரங்கு நீதிபதி, மீண்டும் அந்தப் பக்க அப்பத்துண்டையும் எடுத்துக் கடித்தது. அதனால் மீண்டும் தராசின் பாரம் வித்தியாசப்பட்டது. இப்படியே மாறிமாறிக் கடித்து அப்பம் முழுவதையும் குரங்கே சாப்பிட்டு முடித்துவிட்டது. பூனைகள் தந்திரக் குரங்கிடம் தாம் மோசம் போனதை எண்ணி, இனிமேலேனும் நாம் சண்டைபோடாது இருப்பது நல்லது என்று கூறிக் கொண்டன.

இது தான் நான் சொன்ன அந்தக் கதை. தமிழரசுக்கட்சியிலும் தகுதியுள்ள பூனைகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு, அப்பத்தை ஏதோ ஒரு சுயநலக் குரங்கிடம் கொடுக்கப் போகின்றன. புத்தியுள்ள பூனைகளாய் இருந்தால், அவை அப்பத்தை தாங்களே பகிர்ந்து கொள்வது நல்லதென்று நினைக்கிறேன்.

இந்தக் கதைக்குள் உங்களின் கேள்விக்கான பதில் இருந்தால் கண்டு கொள்ளுங்கள். இல்லாவிட்டால் 'கதையென்றால் ரசிக்க வேண்டுமே தவிர ஆராயக்கூடாது' என்று சொல்லிவிட்டு போய்க் கொண்டே இருங்கள்

**சல்லடையார் சலிப்பு :-வாரிதிரியார் ஆருக்கோ 'சம்பவம்' பண்ணுறாருங்கோ.....**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- சுமந்திரனும் சிறீதரனும் தமக்குள் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?**



**உலக்கையார் பதில் :-**

அது அவர்களுக்குத்தான் தெரியும். ஆனால் ஒன்று! தீர்ப்பது என்று உண்மையிலேயே முடிவு செய்வார்களேயானால், எவ்வளவு விரைவில் அக்காரியத்தைச் செய்யமுடிமோ அவ்வளவு விரைவில் அதனைச் செய்து முடிக்க வேண்டும். பிரச்சினைகளை எவ்வளவுக்கெவ்வளவு பிற்போடுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அப்பிரச்சினை பூதாகரமாகிக் கொண்டே போகும். அல்லது போக வைப்பார்கள். இப்போது பிரச்சினை என்கிற மாட்டின் மூக்கணாங்கயிறு, இவ்விருவர் கையிலும் இருக்கிறது. இன்னும் சில நாள்கள் சென்றால் இவ்விருவரது மூக்கணாங்கயிறும் பிரச்சினைகளை வளர்ப்போரின் கைக்கு போய்விடும். அப்போது இவர்கள் நினைத்தாலும் ஒன்றும் செய்யமுடியாது

**சல்லடையார் சலிப்பு :-கூட இருக்கும் கும்பிடு சாமிகள், இவர்களை தம் இஷ்டப்படி இயங்க விடுவார்களா?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :-**
**'ஏற்பது இகழ்ச்சி' என்றும் 'ஐயமிட்டு உண்' என்றும் கூறியிருக்கும், ஔவையின் கூற்றுகளுக்கிடையில் இருக்கும் முரண்பாட்டைக் கவனித்தீர்களா?**

**உலக்கையார் பதில்:-** ஆஹா! ஔவையாரிலையே குற்றம் கண்டுபிடிக்கிற அளவு, நீங்கள் பெரிய ஆள் ஆகிவிட்டீர்கள். இப்போது சொன்ன இந்த



விடயம் பற்றி, விரிவான ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதுவீர்களானால் நமது பல்கலைக்கழகங்கள் உங்களுக்கு ஓர் உயர்ந்த பட்டத்தைத் தரவும் வாய்ப்பிருக்கிறது. .

ஏன் சாமி? உங்கள் புத்தி இப்படியெல்லாம் குறுக்கே போகிறது? உயர்ந்தவர்கள் சொன்ன வற்றைக் கடைப்பிடிக்காமல், அவர்களில் பிழை கண்டுபிடிப்பதன் மூலம், அவர்களை விட உங்களைப் பெரிய ஆளாய் காட்ட நினைக்கிறீர்கள். பாரதியார், உங்களைப் போன்றவர்களை நினைத்துத் தான் 'அணி செய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவி உளம் காண்கிலார்' எனப் பாடி வைத்திருக்கிறார்.

பிச்சைக்காரரின் முன் வசதியாய் நிற்கும் செல்வருக்கென சொல்லப்பட்ட புத்திமதிதான் 'ஐயமிட்டு உண்' என்பது. அதே போல பிச்சை யெடுத்தே வாழ்ந்துவிடலாம் என நினைப்பவர் களுக்கு சொல்லப்பட்ட புத்திமதிதான் 'ஏற்பது இகழ்ச்சி' என்பது. இதில் எங்கே முரண்பாடு வருகிறது?

படிக்காதவனைப் பார்த்து படி! என்பதும், எப்போதும் படிக்கிறவனைப் பார்த்து சற்று ஓய்வெடு! என்பதும், முரண்பாடுகள் அல்ல. ஆள்களுக்கு ஏற்பச் சொல்லப்படும் புத்திமதி. ஔவையும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சல்லடையார் சலிப்பு -வாரதியாரும் இல் லாட்டி நம்ம வள்ளுவர், கம்பர், ஔவையார் எல்லாரையும் இவங்கள், கடலுக்குள்ள தூக்கி போட்டிடுவாங்கள் போல......!

✦✦✦✦✦✦✦✦✦✦

**5. உரலார் கேள்வி :-கவிதைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? உங்கள் கருத்தினை அறிய விரும்புகிறோம்.**

**உலக்கையார் பதில் :-**ஓசை இன்பம் தரும் கவிதை, சிந்தனையைத் தூண்டும் கவிதை, ஓசை இன்பத்தோடு சிந்தனையைத் தூண்டும் கவிதை எனக் கவிதைகளை மூன்று வகையாய்ப் பிரிக்கலாம் எனத் தோன்றுகிறது. மரபுக் கவிதைகளில் சில, ஓசை இன்பத்தை மட்டும் தரும் கவிதைகளாகவும், வேறு சில ஓசை இன்பத்தோடு சிந்தனையைத் தூண்டும் கவிதைகளாகவும் அமைந்திருக்கின்றன.

புதுக்கவிதைகள் என்று சொல்லப்படும் நவீன கவிதைகளை எழுதுவோரில் பலர், ஓசை இன்பம் பற்றி பெரும்பாலும் கவலைப்படுவதில்லை. அவர்கள், புதிய சிந்தனைகளையே கவிதைகளாக்கித் தருகின்றனர். அச்சிந்தனைகளும் கவிதைத் தன்மை பெற்று மிளிர்கின்றன என்பதில் ஐயத்துக்கு இடமில்லை.

இன்று வெளிவரும் பல புதுக்கவிதைகள் ஓசை இன்பத்தையும்,இழந்து புதிய சிந்தனைகளையும் இழந்து, 'வெற்றுக் கவிதைகளாய்' உலா வந்து கொண்டிருப்பது நிஜம்.

மேற்சொன்ன வகைக் கவிதைகளுக்கு புள்ளியிடச் சொன்னால், தனி ஓசை இன்பம் தரும் கவிதைகளுக்கு 25 புள்ளிகளுக்கு மேல் நான் இடமாட்டேன். அது போலவே ஓசை இன்பம் இன்றி சிந்தனையை மட்டும் தாங்கி வரும் கவிதைகளுக்கு 40 புள்ளிகள் வரை மட்டுமே போட முயற்சிப்பேன். இவற்றை விட, ஓசை இன்பத்தோடு சிந்தனை களை யும் தாங்கி வரும் கவிதைகளுக்கே 75 முதல் 100 வரையிலான புள்ளிகளை இட முனைவேன்.

விதிவிலக்காக, தனி ஓசை இன்பக் கவிதைகளுள் சிலவும் தனிச் சிந்தனைக்கவிதைகள் சிலவும் கூட, அபூர்வமாக 75 முதல் 100 வரையிலான புள்ளிகளை வாங்கி விடுகின்றன.

நல்ல பாத்திரத்தில் நல்ல உணவு கிடைப்ப தென்பது மகிழ்ச்சிதான். மிகத் திறமான உண வென்றால் அதைத்தாங்கிய பாத்திரம் சுமாராக இருந்தாலும் அவ் உணவின் பெறுமதிக்கு குறைவு ஏற்படப் போவதில்லை. அப்படித்தான் ஓசை நயமற்று எழுதப்பட்ட அதிஅற்புதமான சில சிந்த னைக் கவிதைகளும் நம் மனதில் அசையாத இடத்தைப் பிடித்து விடுகின்றன.

இன்று வெளிவரும் புதுக் கவிதைகளில், ஒரு சில, ஆச்சரியப்படத்தக்க வகையில் சிந்தனைக்கு விருந்தளித்தது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன! அண்மையில் ஒரு பழைய 'குமுதத்தை' தற்செயலாய் பார்க்க முடிந்தது. அதில் 'க. அரவிந்த்குமார்' என்கின்ற அதிக பிரபல்யமில்லாத ஒரு கவிஞர் எழுதி இருந்த 'நினைவின் எடை' எனும் தலைப்பிலான ஓர் கவிதையைப் படித்து ரசித்தேன். அவரது புதிய சிந்தனைகள் என்னை வியப் பில் ஆழ்த்தின. இன்னும் சற்று 'எடிற்' செய்தி ருந்தால் கவிதையின் தரம் இன்னும் உயர்ந்திருக்கும் போல

அவர் எழுதிய அக்கவிதையை கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள்.

சட்டென்று உடல் எடை கூடியதாய் காட்டியது எடை பார்க்கும் கருவி.
ஒவ்வொன்றாய் கழற்றி எடையை குறைக்க முயலுமா?
எதை கழற்றலாம் உடலிலிருந்து.. எதை கழற்றினால் எடை குறையும்?
எது எடையைத் தருகிறது? கைகளா? கால்களா? தலையா?
உள்ளிருக்கும் மூளையா? மார்பா? புதைந்திருக்கும் இதயமா?
நினைவுகளே எடை கூடியதாய் உள்ளன.
மிகுந்த பாரம் கொண்டவை நினைவுகளே!..

☆☆☆

வரலாற்றின் சுமையோடு சுமந்து நிற்கிறோம்
நினைவுகளை துரோகங்களை, கசப்புகளை,வீழ்ச்சிகளை, துயரங்களை...
காலம் செல்லச்செல்ல, எடை மிகுதியாய் ஆகின்றன நினைவுகள்
மேலும் பருமனாகிறோம். எடையிழத்தல் என்பது நினைவுகளை துறத்தல் என்பதே.

☆☆☆

சிசுவாய் பிறந்தபோது எனக்கேதும் நினைவுகள் இல்லை
பூவின் இதழ்போல மெல்லியவனாய் இருந்தேன்.
முதுமை கூடும் காலங்களில் பல நினைவுகள் கழன்று போகக் கூடும்
அன்றும் எடையின்றி சருகுபோல மிதப்பேனாக்கும்.
இடையில் தானே எடை. அப்படியெனில் நினைவுகள் தானே சுமை.

☆☆☆

என்னை நினைத்து, நினைத்து, அதன் சுமையை எனக்கும் கடத்தாதீர்கள்
உங்கள் எடையையும் சேர்த்து சுமக்க வேண்டியதாயிருக்கிறது
சிறகு இருப்பதை நினைவில் கொள்ளாத பறவைதான் பறக்கிறது
நான் இருப்பதை நானே அறிந்து கொள்வது எவ்வளவு கொடுமை?

☆☆☆

நினைவின் அடுக்குகள் அகழாய்வு நிலத்தின் பள்ளம்போல
செல்ல, செல்ல ஆழமும், விரிவும் கொள்கின்றன
நினைவை தொலைத்தவர்கள் எடையின்றி பறக்கிறார்கள்
அவர்களுக்கு கவலையேதும் இல்லை
எங்கேனும் துயரம் தோய்ந்த பித்தனை பார்த்ததுண்டா?
நினைவு தப்பியவனுக்கு சுமையேதும் இல்லை

☆☆☆

குறைந்தபட்சம் தூக்கத்தில் நீங்கள் எடையின்றி இருக்கிறீர்கள்
நினைவுகளால் சிக்குண்ட மனிதன்
நூல் சிடுக்குகளுக்குள் நடைபயில வேண்டியிருக்கிறது.
ஒரு கசப்பின் இழை ஒரு இனிப்பின் இழையோடு ஒட்டியிருக்கிறது
இரண்டையும் முழுதாய் சுவைக்க முடியவில்லை

☆☆☆

ஒவ்வொரு கூடலின்போதும் எண்ணற்ற முகங்கள்
வந்துபோகாத ஆண்தான் யார்? பெண்தான் யார்?

☆☆☆

சரி, எடையிழக்க நான் செய்யக் கூடுவது என்ன?
இன்றிலிருந்து நினைவுகளை இழக்கிறேன்
நாளை எங்கேனும் பார்த்தால் என்னைத் தெரிகிறதா? என்று
என்னிடம் கேட்டு தொல்லை பண்ணாதீர்கள் !
முடிந்தால் நினைவிழக்க பயிற்சி செய்யுங்கள்!

சல்லடையார் சலிப்பு :-சிந்தனையால் சிறக்கும் கவிதை

✦✦✦✦✦✦✦✦✦✦

# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2024

### மேஷம்

இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் முயற்சி மூலம் இலக்கை அடைவீர்கள். உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை தரத்துடன்முடித்துத் தருவீர்கள். பணியிடத்தில்உங்கள் திறமையின் மூலம் நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம்அன்பாக இருப்பீர்கள். அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணப்புழக்கம் காணப்படும். புதிய முதலீடுகளில் பணத்தை சேமித்து பயனடையலாம்.

நல்ல ஆரோக்கியமும் தன்னம்பிக்கையும் காணப்படும்.

### ரிஷபம்

இன்று வளர்ச்சி குறைவாக காணப்படும். பெரிய லட்சியங்களை அடைய இன்று சாத்தியம் குறைவாக இருக்கும். சிறப்பாக திட்டமிட்டால் இன்று வெற்றி அடையலாம்.

உங்கள் மேலதிகாரிகளால் எதிர்பாராத தொல்லைகள் ஏற்படும். கடினமான பணிகள்காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் மனதில் அசௌகரியமான உணர்வு இருக்கும்.இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணவளர்ச்சி திருப்திகரமாக இருக்காது.இன்றைய செலவுகளை சமாளிக்க இயலாது.திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

### மிதுனம்

இன்று அமைதியாக மகிழ்ச்சியாக இருங்கள். வெற்றி பெறுவதற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில உங்களுக்கு திருப்தி காணப்படாது. உறுதியுடனும் கவனமாகவும் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் சகஜமாக இருக்க இயலாது. அவரை வெளியிடங்களுக்கு கூட்டிச் செல்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இது உங்களுக்கு சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

வயிறு உபாதைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும்.

### கடகம்

இன்று அமைதியாக இருக்க வேண்டிய நாள்.தெய்வீகப் பாடல்களை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதலைப் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களின்ஆதரவு குறைந்து காணப்படும்.பெண் ஊழியர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

உங்களுக்கு சில குடும்ப பிரச்சினைகள் காணப்படும். இதனால் உங்கள் பிரியமானவருடன் நேரத்தை கழிக்க இயலாது. உங்களால் முடிந்த அளவு அவருக்கு நேரம் ஒதுக்குங்கள்.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும்.மேலும் பண இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கண்காணியுங்கள்.

### சிம்மம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

நீங்கள் குறைந்த நேரத்தில் விரைவாக பணியை முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை கையாள்வீர்கள்.

நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். நீங்கள் வெளியிட ங்களுக்கு செல்ல வாய்ப்பு உள்ளது. அதிக அளவு பணம் காணப்படும். அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.நீங்கள் மகிழ்ச் சியான மனநிலையில் இருப்பதன் காரணமாக முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

### கன்னி

குறைந்த முயற்சியில் உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். இன்று நகைச்சுவை போக்கின் காரணமாக சிறந்ததை சாதிப்பீர்கள்.

சிக்கலான பணகளைக் கூட எளிதில் கையாள்வீர்கள். இன்று உங்களுக்கு புதிய பணிகள் வழங்கப்படும். நீங்கள் அதனை விரும்பி செய்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். எளிதில் சேமிக்க இயலும். எதிர் காலத்துக்கென சிறிது பணத்தை ஒதுக்குவீர்கள்.

### துலாம்

விஷயங்களைக் கையாள்வதில் நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று சிறிதளவு பொறுமை அவசியம்.

இன்று அதிக பணிச்சுமை காணப்படும். ஆனால் முறையான திட்டமிடல் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். உங்கள் சக பணியாளர்களை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு வளர சுமாரான வாய்ப்புகளே உள்ளன.

சிறிய கடன் மூலம் உங்களுக்கு பணம் கிடைக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும்.

### விருச்சிகம்

இன்று சற்று சிரமமான நாள்.இன்று பொறுமையும் உறுதியும் மிகவும் அவசியம்.சரியான திட்டமிடல் மிகவும் அவசியம்.

இன்று பணிச்சூழல் பரபரப்பாக காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடன் சில சிக்கல்கள் காணப்டும். உங்கள் பணிகளை திட்டமிடுவது நல்லது.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான விவாதம் காரணமாக நீங்கள் சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். அமைதியாக இருக்கவும் உறவில் மகிழ்ச்சியை எப்படி தக்க வைத்துக் கொள்வது என்றும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.அதிகரிக்கும் செலவினங்கள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.தேவையற்ற விஷயங்களுக்காக இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2024

## தனுசு

பிரார்த்தனை மற்றும் தியானம் இன்று உங்களுக்கு வழி காட்டும். அதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சி பெறுவீர்கள். இன்று அனைத்தும் உங்கள் கைகளில்தான் உள்ளது.

பணியிடச் சூழல் சவாலானதாகவும் போட்டியுடையதாகவும் காணப்படும். கடினமாக பணிகளைக் கையாள்வதை சவாலாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் சமூகமான உறவு காணப்படாது. தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று நிதிநிலைமை கவலையளிப்பதாக இருக்கும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்காது. இன்று செலவுகள் அதிகம செய்ய நேரலாம்.இன்று நல்ல ஆரோக்கியத்துடனும் அமைதியுடனும் காணப்படுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள்ளுங்கள்.

## கும்பம்

இன்று நீங்கள் அமைதியான அனுசரணையான போக்கை மேற்கொள்ள வேண்டும். இதனால் வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. வெற்றியும் கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக காணப்படும். இதனால் தவறுகள் நேரலாம். இதனை தவிர்த்தல் நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவில் சுமூகமான சூழ்நிலை காணப்படாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லாவிடில் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற கவலைகள் காரணமாக உங்களுக்கு தோள்களில் மற்றும் முதுகில் வலி ஏற்படலாம்.

## மகரம்

இன்று உங்களிடம் தைரியமும் உறுதியும் காணப்படும். இதனால் வளர்ச்சி காணப்டும். தைரியமான மனவலிமை காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் அபாரமான வளர்ச்சி காணப்படுகின்றது. பணியின் மூலம் ஆதாயம் பெற இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். அன்பு நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய முதலீடுகள் செய்வதற்கு உகந்த நாள். அதன் மூலம் மிகுதியாக பணம் கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்.

இன்று மிகவும்ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## மீனம்

இன்று சிக்கலான சூழ்நிலைகளை சமாளிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் சிறப்பாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

விரைந்து பணிகளை முடிக்க உங்கள் சக பணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். பணிகள் அதிகமாக இருப்பதால் கட்டுப்படுத்துவது உங்கள் கைமீறிய செயலாக இருக்கும். உங்கள் திறமையை பணியிடத்தில் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்.

உங்களின்அகந்தைப் போக்கும் பிடிவாதமும் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். சூழ்நிலைக்கேற்ப நீங்கள் உங்கள் துணையுடன்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.சில தேவையற்ற சூழ்நிலைகளை சந்திக்க வேண்டியிருக்கும். அத்தகைய சூழலில் பணம் செலவு செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்புக் குறையும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park




# அதிவேக நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பு ரக்னா லங்கா நிறுவனத்திடம் ஒப்படைப்பு

அதிவேக நெடுஞ்சாலைகளின் உள்ளகப் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் ரக்னா லங்கா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் இந்த கடமையை முன்னெடுத்து வந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அதிலிருந்து விலகியுள்ளனர்.

இந்த நிலையில், அதிவேக நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பிற்காக ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவன அதிகாரிகள் நேற்று முன்தினம் முதல் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதற்காக மாதாந்தம் சுமார் 12 மில்லியன் ரூபாவை செலவிட வேண்டியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் மீரிகம மற்றும் குருநாகலுக்கு இடையிலான பகுதியின் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை கூறியுள்ளது.



# 55 ஹெக்டேர் காடுகள் காட்டுத் தீயினால் அழிவு

கடந்த சில வாரங்களாக பதிவான காட்டுத் தீயினால் 55 ஹெக்டேர் காடுகள் அழிவடைந்துள்ளன என வனவள பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது சுற்றுச்சூழலுக்கு கடுமையான சேதமென வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் கூறியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் காட்டுத் தீயை தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு வாரத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கெஹலிய ரம்புக்வெல்ல சார்பில் பிணை விண்ணப்பம் சமர்ப்பிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பிணை விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

தமது பிணைக் கோரிக்கை மாளிகாகந்த நீதிவானால் பல தடவைகள் நிராகரிக்கப்பட்டதாகவும், நீதவானின் பிணை கோரிக்கையை நிராகரிக்கும் உத்தரவை இடைநிறுத்தி, ஏதாவதொரு நிபந்தனையின் அடிப்படையில் தம்மை பிணையில் விடுவிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சரின் இந்தப் பிணைக் கோரிக்கை எதிர்வரும் திங்கள் கிழமை பரிசீலிக்கப்படவுள்ளது.

தரமற்ற மருந்து விநியோகம் தொடர்பான வழக்கில் கெஹலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் விவகாரம்:

# இழப்பீட்டுக் கோரிக்கையை தள்ளுபடி செய்யும் விண்ணப்பம் சிங்கப்பூர் நீதிமன்றால் நிராகரிப்பு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனத்திடமிருந்து இழப்பீடு கோரி அரசாங்கம் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கப்பல் நிறுவனத்தின் காப்புறுதிப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை சிங்கப்பூர் சர்வதேச வர்த்தக மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கப்பலால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்க லண்டன் நீதிமன்றம் வரையறைகளை விதித்துள்ளதால், வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகள் நீதிமன்றத்தில் கோரியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம், இந்த வழக்கில் ஆட்சேபனை தெரிவிக்க காப்புறுதி நிறுவனங்களுக்கு உத்தரவிட்டது.

அதற்கு சிங்கப்பூர் வர்த்தக மேல் நீதிமன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை காப்புறுதி நிறுவனங்களுக்கு கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# மாணவர்களைக் கல்வியியற்கல்லூரிகளுக்கு உள்வாங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரல்

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக மாணவர்களை கல்வியற்கல்லூரிகளுக்கு உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நேற்று முதல் மாணவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த மாதம் 5 ஆம் திகதியுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான காலம் நிறைவடையவுள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# வெண்பலகை அன்பளிப்பு!

(தில்சாத் பர்வீஸ்)

புனித ரமழானை வரவேற்கும் முகமாக சம்மாந்துறை தப்லிகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கு நீண்ட கால தேவையாகக் காணப்பட்ட “வெண்பலகை” கல்லூரியின் நிர்வாகத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

கல்விக்கு உதவுவோம் திட்டத்தின் ஊடாக இது வழங்கப்பட்டுள்ளது.



# வெடுக்குநாறி மலை அநீதிக்கு எதிராக இன்று அணிதிரளுமாறு வேலன் சுவாமிகள் அழைப்பு



(கே.வசந்தன்)

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்ட அநீதிக்கு எதிராக இன்றைய தினம் காலை 10 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக வடக்கு - கிழக்கு மக்களை அணிதிரளுமாறு வேலன் சுவாமிகள் அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த மகாசிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த ஆலயத்தின் நிர்வாகிகள் மீதும், சிவ பக்தர்கள் மீதும் பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கக்கோரியும் இந்தச் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்கள், சமயம் சார்ந்த அமைப்புக்கள், தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் உணர்வாளர்கள், சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரையும், கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# இன்றைய போராட்டத்தில் இணைந்து கொள்ள வருமாறு கைதானோரின் உறவினர்களும் அழைப்பு விடுக்கின்றனர்

(கே.வசந்தன்

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் இன்று காலை 10 மணிக்கு வவுனியாவில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கைது செய்யப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரை பொலிஸார் அராஜகமாகக் கைது செய்து, பொய்க் குற்றச்சாட்டு சுமத்தி விளக்கமறியலில் உள்ளனர். அவர்களில் 5 பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இன்றைய போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் எனக் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

# தமிழர்களின் இருப்புக்காகப் போராடியவர்களுக்கு நீதி கேட்டு இன்று அனைவரும் ஒன்று திரள்வோம்

## கஜேந்திரன் எம்.பி. தமிழ் மக்களுக்கு அழைப்பு

(கே.வசந்தன்)

தமிழ் மக்களின் இருப்புக்காகப் போராடியபோது கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி இன்று நடைபெறும் போராட்டத்தில் அனைவரும் அணிதிரண்டு கலந்து கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப் பினர் செ.கஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களுக்காக அவர்களது குடும்பத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை (16.03) வவுனியா கந்தசாமி ஆலயத்தின் முன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என




அவர்கள் கோரிக்ரைக விடுத்துள்ளார்கள். அந்த வகையில் சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் விரைந்து செயற்பட்டு அந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். இது அவர்களின் குடும்பத்தின் பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்தத் தமிழரின் இருப்பு சார்ந்த பிரச்சினை. வெடுக்குநாறி மலையில் பௌத்த கோவில் வருவது என்பது தமிழ் மக்கள் தமது இருப்பை இழக்கும் செயற்பாடு. அதனை எதிர்ப்பதற்காகக் கைதானவர்கள் ஒரு தேசத்தின் இருப்புக்காகக் கைது செய் யப்பட்டுள்ளார்கள். ஆகவே ஒட்டுமொத்த தேசமும் அவர்களுக்காகத் திரண்டு குரல் கொடுக்க வேண்டும். - எனத்தெரிவித்தார்.



# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களின் உறவினர்களால் வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முற்றுகை

(செய்தி - முதலாம் பக்கத்தில், படங்கள் - கே.வசந்தன்)




















# நிவாரண பொருள்கள் பெற காத்திருந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை




## இஸ்ரேல் தரப்பில் தெரிவிப்பு

வடக்கு காசா பகுதியில் நிவாரண பொருள்கள் பெற காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை என இஸ்ரேல் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு காசா பகுதியில் நிவாரண பொருள்களை வழங்கும் மையத்துக்கு அருகில் காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில் 20 பேர் பலியாகினர். 155 பேர் காயமுற்றனர் என காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இஸ்ரேல் இராணுவம் இதனை தவறான தகவல் என மறுத்திருப்பதோடு இந்த நிகழ்வை மதிப்பிட முழுமையாக பார்க்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

சில வாரங்களாக வடக்கு காசாவில் நிவாரண பொருள்கள் வழங்கும் மையமாக திகழும் குவைதி அருகில் வன்முறை வெடித்தது. நிவாரண உதவிக்காக காத்திருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

அங்கிருந்தவர்கள் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள், அதிகமான பேர் துப்பாக்கிக் குண்டுகளால் காயமடைந்தனர் என தெரிவித்தனர்.

ஆனால் இஸ்ரேல், உணவுக்காக மக்கள் மோதியதால் அங்கு கலவரம் ஏற்பட்டதாக தெரிவித்தது.

இந்த வன்முறையைத் தொடர்ந்து, அமெரிக்கா காசாவுக்கு நிவாரணம் அனுப்பும் புதிய வழிகளை திறப்பது குறித்து ஆலோசித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதை விட நாம் வாழும் பூமியை பாதுகாப்பது முக்கியம்

## பாரிஸ் உச்சி மாநாட்டில் பராக் ஒபாமா கருத்து

செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதை விட, நாம் வாழும் பூமியை பாதுகாப்பதே முக்கியம் என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

செவ்வாய் கிரகத்தில் குடியேற வேண்டும் என்பதற்கான முனைப்பைவிட, மனிதகுலம் வாழத்தக்கதாக பூமியை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அணுசக்தி யுத்தம் மற்றும் காலநிலை மாற்றம் போன்றவைக்கு பின்னரும், செவ்வாய் கிரகத்தை விட சிறப்பான வாழிடத்தை இந்த பூமி நமக்கு வழங்கக் காத்திருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாரிஸில் நடைபெற்று வரும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கூடிய 'பவர் எர்த்' உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஒபாமா, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக உரையாற்றியுள்ளார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"பல நாடுகளும் செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை கொண்டு செல்லக்கூடிய விண்கலன்களை உருவாக்கி வருகின்றன.

செவ்வாயை பூமியின் காலனியாக மாற்ற முயல்கிறார்களாம். பூமியின் சுற்றுச்சூழல் மிகவும் சீரழிந்து, அது வாழத் தகுதியற்ற இடமாக மாறிவிடும் என்பதால், செவ்வாய் கிரகத்தின் காலனித்துவ திட்டத்தைப் பற்றி பலர் பேசுவதை கேட்கிறேன்.



அப்போதெல்லாம் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது ஒன்றுதான். ஒரு அணு ஆயுதப் போருக்குப் பிறகும், பூமி செவ்வாய் கிரகத்தைவிட வாழத் தகுதி மிக்கதாகவே இருக்கும்.

காலநிலை மாற்றத்திலிருந்து நாம் மீள எதுவும் செய்யாவிட்டாலும், பூமியில் ஒக்ஸிசன் மிச்சமிருக்கும். ஆனால் செவ்வாய் கிரகத்தில் அது சாத்தியமல்ல. எனவே, செவ்வாய் கிரகத்தில் குடியேறுவதை விட பூமியை கவனியுங்கள் என்கிறேன்.

நாம் இந்த பூமியில் வாழ்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளோம். மேலும் இந்த பூமியை பாதுகாத்து நாம் வாழக் கூடிய வகையில் வைத்திருந்தால் நன்றாக இருக்கும்." – என்றார்.

# ஜப்பானில் மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

ஜப்பானின் வடகிழக்கே அமைந்துள்ள ஃபுகுஷிமா பிராந்தியத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவில் 5.8 ஆக பதிவாகி உள்ளதாக வானிலை மற்றும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் விபத்தை சந்தித்த அணு மின் நிலையத்திற்கு அருகே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்,விபத்தால் பாதிக்கப்பட்ட அணு உலையிலிருந்து கதிர்வீச்சு குறைக்கப்பட்ட நீரை வெளியேற்றும் பணி இந்த நிலநடுக்கத்தின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.